श्री मूकाम्बा स्तोत्रं

ஶ்ரீ மூகாம்பிகை துதி

Śri Mūkāmbika Stotram

JAGADGURU BHAGAVĀN ŚRĪ ŚANKARA BHAGAVTPĀDA

INSPIRED TRANSLATION IN TAMIL & ENGLISH

MEE. RAJAGOPALAN

ॐ श्री गुरुभ्यो नमः

Śri Mūkāmbika Stotram

Version 1 - 6th September 2022

MEENALAYA

ॐ श्री गणेशाय नमः

मूलाम्भोरुहमध्यकोणविलसद्बन्धूकरागोज्वलां
ज्वालाजालजितेन्दुकान्तिलहरीमानन्दसन्दायिनीं ।
एलाललितनीलकुन्तलधरां नीलोत्पलाभाम्शुकां
कोलूराद्रिनिवासिनीं भगवतीं ध्यायामि मूकाम्बिकाम् ॥ १ ॥

மூலாம்போ$_4$ருஹ மத்$_4$யகோண விலஸத்$_3$ ப$_3$ந்தூ$_4$க ராகோ$_3$ஜ்ஜ்வலாம்
ஜ்வாலாஜால ஜிதேந்து$_3$ காந்திலஹரீம் ஆநந்த$_3$ ஸந்தா$_3$யிநீம் ।
ஏலா லலித நீலகுந்தலத$_4$ராம் நீலோத்பலாபா$_4$ம் ஶுகாம்
கோலூராத்$_3$ரி நிவாஸிநீம் ப$_4$க$_3$வதீம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 1 ॥

எல்லாவற்றுக்கு மூலமான (ஸ்ரீ சக்ரமாகிய) செந்தாமரையின் மத்தியில் (பிந்து வடிவாக) இருப்பவளும், பந்தூகமெனும் மலராக ஒளிவிடுபவளும், தண்ணிலவொளி அலைகளை (வெட்கும்படி) வெற்றிகொள்ளும் ஆனந்த ஒளியை வீசி (சிந்தாமணியாக) ஆள்பவளும், (சந்தமென) நெளியும் நீலக்கூந்தலை குளிர் சிந்தும் நிலவொளியில் ஆற்றிக் காயவிடுபவளும், நீலமலரைப் போலவும், கிளியைப் போலவும் அழகானவளும், கொல்லூர் மலையில் அருளும் பகவதியுமான (என் தாய்) மூகாம்பிகையை வணங்குகிறேன். (1)

mūlāmbhōruha madhyakōṇa vilasad bandhūka rāgōjjvalāṃ
jvālājāla jitēndu kāntilaharīm ānanda sandāyinīṃ |
ēlā lalita nīla kuntaladharāṃ nīlōtpalābhām śukāṃ
kōlūrādri nivāsinīṃ bhagavatīṃ dhyāyāmi mūkāmbikām || 1 ||

I meditate upon (my mother)
Who shines gloriously (as the Bindu) at the centre of the root-cause of all, the primeval lotus (Sri Chakra), Who is glowing in the colour of Bandhūka flower, Whose lustre of precious flame (like Cintāmani) outshines the mellowing waves of the Moon-light bestowing the supreme bliss, Who caresses Her frolic blue tresses in the cool moon light, Who is like a blue lotus and a parrot, Who is Bhagavati, reigning on the Kollur mountains! (1)

செந்தா மரைமூல பிந்துவென நட்டநடு பந்தூக மலரா கிறாய்!
சிந்தா மணிபோல இந்துமுகம் வெட்கமுறத் தந்தூடி நலமாள் கிறாய்!
எந்தாய் கிளிநீலஞ் சிந்துமலர் உந்தன்சிகைச் சந்தமதி யிற்காய் கிறாய்!
வந்தா யெனதுமனங் கொல்லூர் பகவதி வணங்கி னேன் மூகாம் பிகே! (1)

बालादित्यनिभाननां त्रिनयनां बालेन्दुना भूषितां
नीलाकारसुकेशिनीं सुललितां नित्यान्नदानप्रियां ।
शङ्खं चक्र वराभयां च दधतीं सारस्वतार्थप्रदां
तां बालां त्रिपुरां शिवेनसहितां ध्यायामि मूकाम्बिकाम् ॥ २ ॥

பா$_3$லாதி$_3$த்ய நிபா$_4$நநாம் த்ரிநயநாம் பா$_3$லேந்து$_3$நா பூ$_4$ஷிதாம்
நீலாகார ஸுகேஶிநீம் ஸுலலிதாம் நித்யாந்நதா$_3$நப்ரியாம் ।
ஶங்க$_2$ம் சக்ர வராப$_4$யாம் ச த$_3$த$_4$தீம் ஸாரஸ்வதார்த$_2$ ப்ரதா$_3$ம்
தாம் பா$_3$லாம் த்ரிபுராம் ஶிவேநஸஹிதாம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 2 ॥

உதிக்கின்ற இளங்கதிரவனைப் போன்றவளும், அழகிய முக்கண்களைக் கொண்டவளும், நெற்றியில் இளம்பிறையைச் சூடிய இனியவளும், நீல ஒளியுடன் சுடர்விடும் அழகிய நெடுங்கூந்தலை உடையவளும், ஸ்ரீ லலிதா எனும் திருநாமமுடையவளாய், 'அன்னதானம்' எனும் வரமாக ஆகியவளும், (உலகுக்கு) நலம் (பாதுகாப்பு) கொடுப்பவளாக சங்கு, சக்கரம், கதை முதலியனவற்றைக் கைகளில் ஏந்தியவளும், (பேச்சு முதலான) கலையறிவு தருகின்றவளும், இளமையானவளாக சிவபிரானின் முப்புரத்தில் விளங்கும் (தாயாகிய) மூகாம்பிகையை வணங்குகிறேன். (2)

bālāditya nibhānanāṃ trinayanāṃ bālēndunā bhūṣitāṃ
nīlākāra sukēśinīṃ sulalitāṃ nityānnadānapriyāṃ .
śaṅkhaṃ cakra varābhayāṃ ca dadhatīṃ sārasvatārtha pradāṃ
tāṃ bālāṃ tripurāṃ śivēnasahitāṃ dhyāyāmi mūkāmbikām || 2 ||

I meditate upon (my mother) Mūkāmbika,
Who resembles the rising Sun, Who has (beautiful) three eyes, Who is adorned in the forehead with the crescent Moon, Who has tresses of hair shining with blue lustre, Who is Sri Lalitha, Who is pleased with (the boon of) charity, for the protection (of all), Who carries conch, wheel and mace, Who bestows knowledge, Who is the lass, residing with Lord Śiva in Tripura (2)

இளங்கதிராய் முவ்விழிக லெழிலாகி யேநுதலில் இளமதி கொண்ட தேனாய்
வளர்சுடராய் நந்நீல வரிமுடியாள் ஸ்ரீலலிதை வரமன்ன மென்றும் ஆனாய்!
களநலனாய்ச் சங்குசக் கரங்கதைக் கைக்கொண்டு கலையருளு கின்ற தாயாய்த்
தளசிவனார் முப்புரத் தாரணி முனிந்துனைத் தியானித்தேன் மூகாம் பிகே! (2)

मध्याह्नार्कसहस्त्रकोटिसदृशां मायान्धकारच्छिदां
मायाजालविवर्जितां मदकरीं मारेण संसेवितां ।
शूलम्पाशकपालपुस्तकधरां शुद्धार्थविज्ञानदां
तां बालां त्रिपुरां शिवेनसहितां ध्यायामि मूकाम्बिकाम् ॥ ३ ॥

மத்$_4$யாஹ்நார்கஸஹஸ்ரகோடிஸத்$_3$ருஶாம் மாயாந்த$_4$காரச்சி$_2$தா$_3$ம்
மாயஜால விவர்ஜிதாம் மத$_3$கரீம் மாரேண ஸம்ஸேவிதாம் ।
ஶூலம் பாஶ கபால புஸ்தக த$_4$ராம் ஶுத்$_3$தா$_4$ர்த$_2$ விஜ்ஞாநதா$_3$ம்
தாம் பா$_3$லாம் த்ரிபுராம் ஶிவேந ஸஹிதாம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 3 ॥

கோடிக்கணக்கில் எழுந்த நண்பகற் சூரியனாகப் பேரொளியானவளும் (அறியாமை இருளை முற்றும் அழிக்கின்ற ஞானப் பேரொளியாகவும், அதேசமயம்), அறியாமையாகிற மாயையின் இருள் போன்றவளும் (வேற்றுமையற்றதான பேருண்மையை மூடி மறைக்கின்ற இருட்திரையானவளும்), எங்கும் மாயவலை விரிப்பவளும், மதயானை போல் பெரும் சுகத்தில் திளைப்பவளும், மன்மதனின் சேவையை ஏற்பவளும், காத்தருள (பொன்னாலாகிய) சூலம், இழை (கயிறு), தலை எலும்பால் ஆன பானை, இதழ் (புத்தகம்) என ஏந்தியவளும், ஞானமாகிய மெய்நிதியையும் ('ஶ்ரேயஸ்'), வாழ்க்கைச் செல்வங்களையும் ('ப்ரேயஸ்') தருபவளும், சிவபிரானின் முப்புரத்தில் விளங்கும் இளமையான (தாயாகிய) மூகாம்பிகையை வணங்குகிறேன். (3)

madhyāhnārka sahasrakōṭi sadṛśāṃ māyāndhakāracchidāṃ
madhyāntādivivarjitāṃ madakarīṃ mārēṇa saṃsēvitāṃ .
śūlampāśakapālapustakadharāṃ śuddhārthavijñānadāṃ
tāṃ bālāṃ tripurāṃ śivēnasahitāṃ dhyāyāmi mūkāmbikām || 3 ||

I meditate upon (my mother) Mūkāmbika,
Who shines like the billion Sun at noon (the effulgence of Self-realization that cut asunder the Māyā), Who (as well as) is the darkness of Māyā (the dark nescience that envelops the True nature of the Self) , Who spreads the net of Māyā, Who is exuberant like the elephant of ecstasy, Who is served by Manmatha, the god of Love, Who carries the (golden) trident, rope, skull-ware, and book, Who grants (both) wisdom (Sreyas) and prosperity (Preyas) - Who is the lass, residing with Lord Śiva in Tripura (3)

தன்மயம் மூடுமிருட் புன்மய மாயமறு நண்பகற் கோடி ஒளியே!
மின்மய மாயவலை பின்னிடும் யானைமத மன்மதன் சேவை யிடவே
பொன்மயச் சூலமிழை என்புருப் பானையிதற் சின்மய ஞான நிதியே!
நின்வயம் ஈசரிணை முந்நகர் வாசியிளம் அன்னையே மூகாம் பிகே! (3)

सन्ध्यारागसमाऽननां त्रिनयनां सन्मानसैः पूजितां
चक्राक्षाभय कम्पि शोभितकरां प्रालम्बवेणीयुतां ।
ईषत्फुल्लसुकेतकीदललसत्सभ्यार्चिताङ्घ्रिद्वयां
तां बालां त्रिपुरां शिवेनसहितां ध्यायामि मूकाम्बिकाम् ॥ ४ ॥

ஶிவேஶானதத்பூருஷாகோ4ரவாமாதி3பி4:
ஸந்த்4யாராக3ஸமா(அ)நநாம் த்ரிநயநாம் ஸந்மாநஸை பூஜிதாம்
சக்ராக்ஷாப4ய கம்பி ஶோபி4தகராம் ப்ராலம்ப3வேணீ யுதாம் ।
ஈஷத்பு2ல்ல ஸுகேதகீ த3லலஸத்ஸப்4யார்சிதாங்க்4ரித்3வயாம்
தாம் பா3லாம் த்ரிபுராம் ஶிவேநஸஹிதாம் த்4யாயாமி மூகாம்பி3காம் ॥ 4 ॥

(சந்திப் போதின் இன்னிசையானவளும், அருளும் முவ்விழியளும், நெறியாளர்களால் தொழப்படுபவளும், அருளலை பாய்கின்ற விழிகளை உடையவளும், வேய்கரங்களில் வந்து தழுவும் ஆரங்கள் கொண்டவளும், நல்லோர்களால் அர்ச்சிக்கப்படுகின்ற மெல்ல மலரும் தாழம்பூ (கேதகி) இதழைப் போன்ற இணையடிகளை உடையவளும், இளமையானவளாக சிவபிரானின் முப்புரத்தில் விளங்கும் மூகாம்பிகையை வணங்குகிறேன் (4)

sandhyā rāga samā'nanāṃ trinayanāṃ sanmānasaiḥ pūjitāṃ
cakrākṣābhaya kampi śōbhitakarāṃ prālamba vēṇīyutāṃ .
īṣatphulla sukētakī dalalasat sabhyārcitāṅghridvayāṃ
tāṃ bālāṃ tripurāṃ śivēnasahitāṃ dhyāyāmi mūkāmbikām || 4 ||

I meditate upon (my mother) Mūkāmbika,
Who is like the melody of dawn, Who has (graceful) three-eyes, Who is worshipped by virtuous devotees, Who has rolling eyes giving protection, Who has (bamboo like) hands that are caressed by the decorative braids, Who has divine feet that resemble the petals of gently blossoming Ketaki flower and that are worshipped by the good, Who is the lass, residing with Lord Śiva in Tripura! (4)

சந்திப் போதினிசை சிந்தும் மூவிழியும் சந்தத் தூமதியர் பாட
வந்துன் மேலணிகள் உந்தும் வேய்கரமும் தந்துன் பூவிழிகள் ஆட
பந்துத் தாழையிதழ் சிந்தப் பூவடிகள் வந்தித் தேநலரும் நாட
சிந்தித் தேனரனைப் பந்திப் பாளிளமை மொந்தும் மூநகரி மூகாம் பிகே! (4)

கொல்லூர் ஸ்ரீ மூகாம்பிகை

चन्द्रादित्यसमानकुण्डलधरां चन्द्रार्ककोटिप्रभां
चन्द्रार्काग्निविलोचनां शशिमुखीमिन्द्रादिसंसेवितां ।
मन्त्राद्यन्तसुतन्त्रयागभजितां चिन्ताकुलध्वंसिनीं
मन्दारादिवनेस्थितां मणिमयीं ध्यायामि मूकाम्बिकाम् ॥ ५ ॥

சந்த்$_3$ராதி$_3$த்யஸமாநகுண்ட$_3$லத$_4$ராம் சந்த்$_3$ரார்ககோடிப்ரபா$_4$ம்
சந்த்$_3$ரார்காக்$_3$நிவிலோசநாம் ஶஶிமுகீ$_2$மிந்த்$_3$ராதி$_3$ஸம்ஸேவிதாம் ।
மந்த்ராத்$_3$யந்தஸுதந்த்ரயாக$_3$ப$_4$ஜிதாம் சிந்தாகுலத்$_4$வம்ஸிநீம்
மந்தா$_3$ராதி$_3$வநேஸ்தி$_2$தாம் மணிமயீம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 5 ॥

சூரிய சந்திர்களைக் காதுகளில் குழையாக அணிந்தவளாகக் கோடி சூரிய சந்திரர்களைப் போன்ற ஒளிவீசும் முகம் கொண்டவளும், ஆதிக்கனலாகிய அக்னி, மற்றும் சந்திர சூரியர்களைக் கண்களாகக் கொண்டவளும், மதி முகத்தவளும், தேவர்களால் நாடித் துதிக்கப்படுபவளும், மந்திரம் ஓதல், அகவுணர்வு (அத்யாத்ம ஞானம்), வரியுரு (யந்திரம்) முதலான நல்வழிகளால் பூசிக்கப்படுபவளும், (அவ்வாறு) பூசிப்போரின் மனத்துயராகிய இடரைக் களைபவளுமான, மந்தார மரங்கள் மிகுந்த காட்டில் இருந்தாள்கின்ற, மணியாகிய (எனது தாய்) மூகாம்பியை என் மனதுள் இருத்தும் சாதனையைச் செய்கிறேன். (5)

candrāditya samāna kuṇḍaladharāṃ candrārka kōṭiprabhāṃ
candrārkāgni vilōcanāṃ śaśimukhīm indrādi saṃsēvitāṃ .
mantrādyantasutantra yāgabhajitāṃ cintākuladhvaṃsinīṃ
mandārādi vanēsthitāṃ maṇimayīṃ dhyāyāmi mūkāmbikām || 5 ||

I meditate upon (my mother) Mūkāmbika,
Who wears ear-globes that resemble the Sun and the Moon, Who has the grace glowing like billions of sun and moon, Who has Moon, Sun and Agni as eyes, Who has moon-like face, Who is served by Indra et al, Who is worshipped through Mantra recital, internal contemplation and rites based on virtuous icons of geometry (yantra), Who grants boon desired by the devotees, Who removes (their) grief - Who resides in the Mandāra forest as a gem! (5)

காதிற் குழையொளி கோடிக் கதிர்மதி யாகிச் சுடரிடு மெழிலாகும்
ஆதிக் கனல்மதி சோதிப் பரிவிழி யாகும் முகமதி சுரர்நாடும்
ஓதித் தனுளுணர் வேகித் துருவரி பூசிப் பவரிடர் களைவாயே
சாதித் திடவுமந் தார வனமணித் தாயைப் பணிவனே மூகாம் பிகே! (5)

कल्याणीं कमलेक्षणां वरनिधिं वन्दारुचिन्तामणिं
कल्याणाचलसंस्थितां घनकृपां मायां महावैष्णवीं ।
कल्यां कम्बुसुदर्शनां भयहरां शम्भुप्रियां कामदां
कल्याणीं त्रिपुरां शिवेनसहितां ध्यायामि मूकाम्बिकाम् ॥ ६ ॥

கல்யாணீம் கமலேக்ஷணாம் வரநிதி$_4$ம் வந்தா$_3$ருசிந்தாமணிம்
கல்ஃயாணாசலஸம்ஸ்தி$_2$தாம் க$_4$நக்ருபாம் மாயாம் மஹாவைஷ்ணவீம் ।
கல்யாம் கம்பு$_3$ஸுத$_3$ர்ஶநாம் ப$_4$யஹராம் ஶம்பு$_4$ப்ரியாம் காமதா$_3$ம்
கல்யாணீம் த்ரிபுராம் ஶிவேநஸஹிதாம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 6 ॥

நலமிகு சீர்மை தருபவளும், தாமரை மலர்களைப் போன்ற விழிகளை உடையவளும், புனிதமான நிதியானவளும், விழுமியதைத் தரும் அருளைச் சிந்துகின்ற அரிய (சிந்தா)மணியானவளும், உயர்வான (மேரு) மலையில் அமர்பவளும், மேலான அருளை அளிப்பவளும், (பரஅறிவை மறைத்து வேற்றுமைகளை நிறைக்கும்) மாயா சக்தியானவளும், 'வைஷ்ணவி' என அழைக்கப்படுபவளும், மூங்கிலிடையே இருப்பவளும், பயமூட்டுபவளும், இனியவளும், சிவனுடன் இணைந்து முப்புரியினை ஆளும் நலமுமாகிய மூகாம்பிகையை (என்னுள் வரித்த உருவாய்த்) தியானிக்கிறேன். (6)

kalyāṇīṃ kamalēkṣaṇāṃ varanidhiṃ vandāru cintāmaṇiṃ
kalẏāṇācala saṃsthitāṃ ghanakr̥pāṃ māyāṃ mahā vaiṣṇavīṃ .
kalyāṃ kambusudarśanāṃ bhayaharāṃ śambhupriyāṃ kāmadāṃ
kalyāṇīṃ tripurāṃ śivēnasahitāṃ dhyāyāmi mūkāmbikām || 6 ||

I meditate on that Mūkāmbika,
Who is goddess of auspiciousness , who is with Lord Śiva of Tripuri, Who grants auspiciousness , Who has lotus-like eyes, Who is the virtuous treasure, like the wish bearing lustrous gem, seated on the auspicious (Meru) mountains Who bestows grace in abundance, Who is Māyā, Who is known as Vaishnavi, the virtuous Who is seen among the bamboos, Who causes fear (that leads to grace), Who is the love of Śiva, the Lord of Tripura, I meditate upon Her (6)

சீரருள்வாள் மலர்த் தாமரையாள் விழிச் செந்நிதி சிந்தொளி மணியாள்
மேருருவாய் மலை மேலருள்வாள் மறை மெய்த்திரை வைணவி இனியாள்
பேருருவாய் சிவ னாரிணையாய் பயஞ் செய்தருள் வேய்வனம் முனிவாள்
வாருருவாய்ப் புரி மூவுடையாள் பர வடிவணைந் தவளே மூகாம் பிகே! (6)

कालाम्भोधरकुन्तलाञ्चितमुखां कर्पूरवीटीयुतां
कर्णालम्बितहेमकुण्डलधरां माणिक्यकाञ्चीधरां ।
कैवल्यैकपरायणां कलिमलप्रध्वंसिनीं कामदां
कल्याणीं त्रिपुरां शिवेनसहितां ध्यायामि मूकाम्बिकाम् ॥ ७ ॥

காலாம்போ$_4$த$_4$ர குந்தலாஞ்சிதமுகா$_2$ம் கர்பூர வீடீயுதாம்
கர்ணாலம்பி$_3$த ஹேமகுண்ட$_3$லத$_4$ராம் மாணிக்ய காஞ்சீத$_4$ராம் ।
கைவல்யைகபராயணாம் கலிமல ப்ரத்$_4$வம்ஸிநீம் காமதா$_3$ம்
கல்யாணீம் த்ரிபுராம் ஶிவேநஸஹிதாம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 7 ॥

கார்மேகம் போன்று கருமையும் நெளிவும் கொண்ட கூந்தல் உடையவளும், கற்பூரமணியாய்ச் சுடர்பவளும், செவிகளில் பொன்னாலான குண்டலங்கள் அணிபவளும், உடலில் மாணிக்கமாகிய செம்மணி பதித்த பொன்னணி அணிபவளும், நலமிகு சீர்மை தருபவளும், தாமரை மலர்களைப் போன்ற விழிகளை உடையவளும், புனிதமான நிதியானவளும், சீர்மைதரும் முக்தியை விழைவாரால் தொழப்படுபவளும், (அப்படித்) தொழுபவர்களுக்கு, ஆசையால் எழும் கலிகாலத் துயரங்கள் எல்லாம் விடுபட்டு நற்கதியடைய அருள் செய்பவளும், இனியவளும், சிவனுடன் இணைந்து முப்புரியினை ஆளும் நலமுமாகிய மூகாம்பிகையை (என்னுள் வரித்த உருவாய்த்) தியானிக்கிறேன். (7)

kālāmbhōdhara kuntalāñcita mukhāṃ karpūra vīṭīyutāṃ
karṇālambita hēma kuṇḍala dharāṃ māṇikya kāñcīdharāṃ .
kaivalyaika parāyaṇāṃ kalimala pradhvaṃsinīṃ kāmadāṃ
kalyāṇīṃ tripurāṃ śivēnasahitāṃ dhyāyāmi mūkāmbikām || 7 ||

I meditate on that Mūkāmbika,
Who is enchanting with the dark, wavy hair like the rain-bearing cloud, Who shines like Camphor, Who wears golden studs on the ears and lustrous rubies embellished golden ornaments on the body, Who is sought by those seeking liberation, (to those) Who grants freedom from the ills of Kali age and desires, Who is pleasing, Who is with Śiva, the Lord of Tripura! (7)

காருருவாய் முகிற் காதணிவாள் முகம் கற்பூ ரச்சுடர் மணியாள்
சேருருவார் குழைச் சீரணிவாள் சுடர்ச் செம்மணிப் பொன்னுட லணிவாள்
சீருருவார் தொழுஞ் சீருகுவாள் கலி செய்யிடர் குன்னிட இனிவாள்
வாருருவாய்ப் புரி மூவுடையாள் பர வடிவணைந் தவளே மூகாம் பிகே! (7)

नानाकान्तिविचित्रवस्त्रसहितां नानाविधैर्भूषितां
नानापुष्पसुगन्धमाल्यसहितां नानाजनैस्सेवितां ।
नानावेदपुराणशास्त्रविनुतां नानाकवित्वप्रदां
नानारूपधरां महेशमहिषीं ध्यायामि मूकाम्बिकाम् ॥ ८ ॥

நாநா காந்தி விசித்ர வஸ்த்ர ஸஹிதாம் நாநா விதை$_4$ர்பூ$_4$ஷிதாம்
நாநா புஷ்ப ஸுக$_3$ந்த$_4$ மால்ய ஸஹிதாம் நாநா ஜநைஸ்ஸேவிதாம் ।
நாநா வேத$_3$ புராண ஶாஸ்த்ர விநுதாம் நாநா கவித்வப்ரதா$_3$ம்
நாநா ரூபத$_4$ராம் மஹேஶ மஹிஷீம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 8 ॥

பலவித அழகிய, ஒளிமிகுந்த ஆடைகளை அணிபவளும், பலவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், மணம் கமழும் பலவித மலர்களால் ஆகிய மாலைகளை அணிபவளும், பலவிதமான மனிதர்களாலும் துதிக்கப்படுபவளும், வேதம், புராணம் முதலான பலவித சாத்திரங்களால் புகழப்படுபவளும், பலவகையான கவித்வ அறிவை அருள்பவளும், பலவித வடிவங்களைத் தரிப்பவளும், மஹேஸ்வரரின் இராணியுமான (அருள்மிகு) மூகாம்பிகையைப் பணிகிறேன்! (8)

nānā kānti vicitra vastra sahitāṃ nānā vidhair bhūṣitāṃ
nānā puṣpa sugandha mālyasahitāṃ nānā janaissēvitāṃ .
nānā vēda purāṇaśāstra vinutāṃ nānā kavitva pradāṃ
nānā rūpa dharāṃ mahēśa mahiṣīṃ dhyāyāmi mūkāmbikām || 8 ||

I meditate on that Mūkāmbika,
Who is dressed in various bright and wonderful cloths, Who is decorated with various ornaments, Who is adorned with various garlands of fragrant flowers of many kinds, Who is worshiped by various types of people, Who is revered by various Veda, Purāna and (such) scriptures, Who bestows various skills of poetry, Who takes various forms, Who is the reigning Queen of Mahēśwara! (8)

பற்பல துகிலெழில் பலவித ஆடை பலவகை மணிகளும் அணியும்
பற்பல நறுமண மலரணி யாரம் பலவகை மனிதரும் பணியும்
பற்பல மறைபு ராணமும் புகழும் பலவகைப் புலமையும் அருளும்
பற்பல வடிவுறு பரசிவத் திருவே பணிவுறு வேனருள் மூகாம் பிகே! (8)

राकातारकनयनोज्ज्वलमुखीं श्रीकामकाम्यप्रदां
शोकारण्यधनञ्जयप्रतिनिभां कोपाटवीचन्द्रिकां ।
श्रीकान्तादिसुरार्चितां स्त्रियमिमां लोकावलीनाशिनीं
लोकानन्दकरीं नमामि शिरसा ध्यायामि मूकाम्बिकाम् ॥ ९ ॥

ராகா தாரக நயநோஜ்ஜ்வலமுகீ$_2$ம் ஶ்ரீகாம காம்யப்ரதா$_3$ம்
ஶோகாரண்ய த$_4$நஞ்ஜய ப்ரதிநிபா$_4$ம் கோபாடவீ சந்த்$_3$ரிகாம் ।
ஶ்ரீகாந்தாதி$_3$ ஸுரார்சிதாம் ஸ்த்ரியமிமாம் லோகாவலீ நாஶிநீம்
லோகாநந்த$_3$கரீம் நமாமி ஶிரஸா த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 9 ॥

நிலவைப் போன்ற முகமும் விண்மீன் சுடரைப் போன்ற விழிகளும் கொண்டவளும், காமனது ஆசைகளை நிறைவு செய்தவளும், துயரமாகிய காட்டில் சிக்கி விலவிலத்த அர்ச்சுனருக்கு முன்னெழுந்து அருளிய நிலவானவளும், (மலர்விழியரனா) திருமால் முதலான தேவர்களால் துதிக்கப்படுபவளும், உலகங்கள் யாதையும் (தன்னுள் ஈர்த்து) அழிக்கின்ற நங்கையானவளும், உலகங்களுக்கு அருள் செய்கின்ற நலமுமான மூகாம்பிகையை, தலை வணங்கி மனம் முனிந்து வேண்டுகிறேன்! (9)

rākā tāraka nayanōjjvalamukhīṃ śrīkāma kāmyapradāṃ
śōkāraṇya dhanañjaya pratinibhāṃ kōpāṭavī candrikāṃ .
śrīkāntādi surārcitāṃ striyamimāṃ lōkāvalī nāśinīṃ
lōkānanda karīṃ namāmi śirasā dhyāyāmi mūkāmbikām || 9 ||

I meditate on that Mūkāmbika,
Who has a moon like face and shining eyes like the stars, Who fulfilled the desires of Manmatha, Who is the moon of solace to Arjuna who was deluded and stranded in the forest of grief, Who is worshipped by (lotus-eyed) Sri Hari (and all other gods) and Devas, Who is the annihilator of all worlds, (yet) Who bestows grace to all worlds, by bowing my head and offering my obeisance! (9)

நிலவொளி முகமும் சுடர்மீன் விழியும் நெடுமலர் மாறனை நிறைக்கும்,
விலவிலத் தயரும் விரிவனம் உழலும் விசயனுக் காயருள் இறைக்கும்
மலர்விழி அரியும் அமரரும் பணியும் மாதென யாதுல கறுக்கும்
உலகருள் புரியும் நலமுனை முனியும் உருசிரம் பணிவேன் மூகாம் பிகே! (9)

काञ्चीकिङ्किणिकङ्कणाङ्गदधरां मञ्जीरहारोज्वलां
चञ्चत्काञ्चनसत्किरीटघटितां ग्रैवेयभूषोज्वलां ।
किञ्चिन्त्काञ्चनकञ्चुके मणिमये पद्मासने संस्थितां
पञ्चास्याञ्चितचञ्चरीं भगवतीं ध्यायामि मूकाम्बिकाम् ॥ १० ॥

காஞ்சீகிங்கிணிகங்கணாங்க$_3$த$_3$த$_4$ராம் மஞ்ஜீரஹாரோஜ்ஜ்வலாம்
சஞ்சத்காஞ்சநஸத்கிரீடக$_4$டிதாம் க்$_3$ரைவேயபூ$_4$ஷோஜ்ஜ்வலாம் ।
கிஞ்சிந்த்காஞ்சநகஞ்சுகே மணிமயே பத்$_3$மாஸநே ஸம்ஸ்தி$_2$தாம்
பஞ்சாஸ்யாஞ்சிதசஞ்சரீம் ப$_4$க$_3$வதீம் த்$_4$யாயாமி மூகாம்பி$_3$காம் ॥ 10 ॥

பொன்னாலான கங்கணம், வளையல், கொலுசு என அணிபவளும், காற்கழலின் பொன்னொளியால் மிளிர்பவளும், எங்கும் ஒளிரும் பொன்மகுடம் தரித்து, மணிகள் பதித்த பொன்னாலான ஒட்டியாணம் இடையில் அணிந்து ஒளிர்பவளும், சில பொற்காப்புகளும், பொன்னும் மணிகளும் பதிந்த ஆடையினையும் (மங்களமாக) அணிந்து இருப்பவளும், 'பத்மாஸனம்' எனும் தாமரை மலரிருக்கையில், ஒளிமிக்க சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பவளுமான, பகவதியாகிய மூகாம்பிகையை, (என் அடைக்கலமாக) மனம் முனிந்து வேண்டுகிறேன்! (10)

kāñcī kiṅkiṇi kaṅkaṇāṅgadadharāṃ mañjīra hārōjjvalāṃ
cañcat kāñcana satkirīṭa ghaṭitāṃ graivēyabhūṣōjjvalāṃ .
kiñcint kāñcana kañcukē maṇimayē padmāsanē saṃsthitāṃ
pañcāsyāñcita cañcarīṃ bhagavatīṃ dhyāyāmi mūkāmbikām || 10 ||

I meditate on that Mūkāmbika,
Who wears golden beads, bangles and anklets, Who shines in golden anklets, Who is adorned with a shining golden crown, golden waist-belt and ornaments, Who wears a few golden bracelets and golden-dress studded with precious gems, Who is seated in the louts-posture on the Lion-throne as Bhagavathi! (10)

கங்கணம் கிங்கிணி பொன்வளையும் கழலணி மிளிர்மணிப் பொன்னெழிலும்
எங்கினும் தன்வயப் பொன்மகுடம் இடையணி உடைவடப் பொன்னொளியும்
மங்களப் பொன்னிழை மணிபதியும் மலரருட் பங்கய மதிலமரும்
பைங்கிளி சிம்மா சனமொளிரும் பகவதி யென்புகல் மூகாம் பிகே! (10)

सौवर्णाम्बुजमध्यकान्तिनयनां सौदामिनीसन्निभां
शङ्खं चक्रवराभयानि दधतीमिन्दोः कलां बिभ्रतीं ।
ग्रैवेयाङ्गदहारकुण्डलधरामाखण्डलादिस्तुतां
मायाविन्ध्यविलासिनीं भगवतीं ध्यायामि मूकाम्बिकाम् ॥ ११ ॥

ஸௌவர்ணாம்பு3ஜமத்4யகாந்திநயநாம் ஸௌதா3மிநீஸந்நிபா4ம்
ஶங்க2ம் சக்ரவராப4யாநி த3த4தீமிந்தோ3 கலாம் பி3ப்4ரதீம் ।
க்3ரைவேயாங்க3த3ஹாரகுண்ட3லத4ராமாக2ண்ட3லாதி3ஸ்துதாம்
மாயாவிந்த்4யவிலாஸிநீம் ப4க3வதீம் த்4யாயாமி மூகாம்பி3காம் ॥ 11 ॥

பொற்றாமரையின் நடுப்பகுதியைப் போன்ற (ஒளிமிக்க) கண்களை உடையவளும், மின்னலைப் போலப் பிரகாசிப்பவளும், (அடியார்களுக்கு) வரங்கள் அருளுகின்ற கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியவளும், கழுத்தில் பொன்மணி, மாலை, காதுகளில் பொற்குழை தரித்தவளும், எல்லா உலகங்களாலும் வணங்கப்படுபவளும், தனது மாயா சக்தியாலேயே தன்னை விந்திய மலையில் வெளிப்படுத்துபவளுமான பகவதியாகிய மூகாம்பிகையை, மனம் முனிந்து வேண்டுகிறேன்! (11)

sauvarṇāmbuja madhya kānti nayanāṃ saudāminī sannibhāṃ
śaṅkhaṃ cakra varābhayāni dadhatīm indōḥ kalāṃ bibhratīṃ .
graivēyāṅgada hārakuṇḍaladharām ākhaṇḍalādi stutāṃ
māyāvindhyavilāsinīṃ bhagavatīṃ dhyāyāmi mūkāmbikām || 11 ||

I meditate on that Mūkāmbika,
Who has eyes that resemble the middle of the golden lotus, (glittering) like lightning, Who holds in the boon-bestowing (hands) conch and wheel, Who wears necklace, garlands and ear-globes, Who is worshipped all over the universe, Who delights on the Vindhya Mountains due to (Her) Māyā, Who is Bhagavathi! (11)

பொற்றா மரைநடுப் பூவிழியும் பொலியுடல் மின்னற் போலொளியும்
வற்றா நிறைவிடு வார்கரமும் வளைகடல் சக்கர மாயெழிலும்
கற்றாய்ப் பொன்மணி மாலைமிகும் கனகக் குழைசெவி ஞாலந்தொழும்
நற்றாய் விந்திய மாமாயே நடுவுளம் பகவதி மூகாம் பிகே! (11)



श्री मूकाम्बा स्तोत्रं

श्रीमन्नीपवने सुरैर्मुनिगणैरप्सरोभिश्च सेव्यां
मन्दारादि समस्तदेवतरुभिस्सम्शोभमानां शिवां ।
सौवर्णाम्बुजधारिणीं त्रिनयनां एकादिकामेश्वरीं
मूकाम्बां सकलेष्टसिद्धिफलदां वन्दे परां देवताम् ॥ १२ ॥

ஶ்ரீமந்நீபவநே ஸுரைர் முநிக$_3$ணைரப்ஸரோபி$_4$ஶ்ச ஸேவ்யாம்
மந்தா$_3$ராதி$_3$ ஸமஸ்ததே$_3$வ தருபி$_4$ஸ்ஸம்ஶோப$_4$மாநாம் ஶிவாம் ।
ஸௌவர்ணாம்பு$_3$ஜதா$_4$ரிணீம் த்ரிநயநாம் ஏகாதி$_3$காமேஶ்வரீம்
மூகாம்பா$_3$ம் ஸகலேஷ்டஸித்$_3$தி$_4$ப$_2$லதா$_3$ம் வந்தே$_3$ பராம் தே$_3$வதாம் ॥ 12 ॥

தேவர்கள், முனிவர்கள், கணங்கள், அப்ஸரஸ் முதலானோரைத் தனது புனித அருளால் தமக்குப் பணி செய்யச் செய்பவளும், சிவனின் துணையும், மந்தார மரமாகச் சூழ்ந்திருந்து தன்னைத் துதிக்கின்ற தேவர்கள் முதலானோரை எல்லாம் அருளொளியால் பிரகாசமாக்குபவளும், பொற்றாமரையைக் கையிலே வைத்திருப்பவளும், (அருள்தரும்) முவ்விழிகளை உடையவளும், 'காமேஶ்வரி' எனப் பரசிவனின் ஒரே பிணைப்பாக ஆனவளும், எல்லா விருப்பங்களையும் நிறைவு செய்து, மேன்மையான நிலையைக் கொடுப்பவளுமான மிக உயர்வான மூகாம்பிகைக்கு எனது பணிவான வணக்கங்களைச் செய்கிறேன். (12)

śrīmannīpavanē surair muniganạir apsarōbhiśca sēvyāṃ
mandārādi samasta dēvatarubhis samśōbhamānāṃ śivāṃ .
sauvarṇāmbuja dhāriṇīṃ trinayanāṃ ēkādi kāmēśvarīṃ
mūkāmbāṃ sakalēṣṭa siddhiphaladāṃ vandē parāṃ dēvatām || 12 ||

I offer my obeisance to that supreme Mūkāmbika,
Who, by Her divine will, makes the devas, sages, angels and (the celestial maid) Apsaras serve Her, the consort of Śiva Who makes all worshippers (devas etc) who are surrounding Her as Mandāra trees to shine by Her grace, Who holds the golden-lotus in Her hand, Who has three-eyes, the only supreme love of Iśvara, who bestows the fruits of all desires and perfections! (12)

அருளால் அமரரும் முனிகணம் அப்சரஸ் அனைவரும் பணியுற உகுவாயே!
தருவாய் அமரர்கள் முதலனைத் தடியர் தகையொளி மிகவருள் தருவாயே!
திருவாய்ப் பொன்மலர்க் கரமருள் முவ்விழி திகழிணை அரன்துணை எனமாயே !
வருவாய் அகநிறை வருள்வாய் மிகவுயர் வடிவே பணிவேன் மூகாம் பிகே! (12)

இத்துடன் ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் அருளிய
ஸ்ரீ மூகாம்பிகை துதி நிறைவு பெறுகிறது.

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

உ

ஸ்ரீ மூகாம்பிகை காப்பு



ஆகாத தேது அடியவருக் கோர்தீதும்
ஏகாது காப்பாள் எமதன்னை – மாகாளி!
சாகா வரமருளும் சங்கரி கொல்லூரின்
மூகாம் பிகைநம் துணை!

ஸ்ரீ மூகாம்பிகை காப்பு

ஓம்ஹ்ரீம் ஐம்ஸ்ரீம் ஒலியருட் சக்தி
உயர்வினை அருளும் பரமசிவ சக்தி
காம கலாவதி கனிவருள் சக்தி
காளீ ஸ்ரீபிரஹந் நாயகி சக்தி

இச்சை அறிவு இயலெனும் அரிய
முச்சக் திகளின் முழுவடி வினளாய்
மூகாம் பிகையாள் முன்னிருந் தருள
ஏகாம் பரனார் இணையாள் அடியை

சிந்தையி ருத்திச் செய்துதி இதனை
முந்தைப் பழியற முனிவோர்க் கிரங்கி
வந்திடும் தாயின் வடிவடி பணிய
நந்தியின் மகனார் நலமருள் கனிய

பாப்புது மாலைப் பதிவுற நூற்றுக்
காப்பிது வாகக் கனிவுடன் நோற்று
இருளிட ரழிய இறையொளி பொழியக்
குருவருள் புரியக் குறைகளை வோமே!

கோகர் ணம்முதற் குமரித் தென்முனை
ஆகிடும் நந்நிலம் அதுமுன் பரசு
இராமரும் அமைத்த இரம்மிய தேசம்!
தேவருந் தினந்தொழும் திவ்விய பூமி!

இடைவளம் மிஞ்சும் இயற்கையும் கொஞ்சும்
நடையுடை மேலை மலைத்தொடர் நாடு
தென்னகக் கர்நா டகநா டிட்ட
நந்நகர் உடுப்பி நலமா வட்டப்

பிந்தூர் வட்டம் பெருவளம் கொட்டும்
தந்தூ றமுதந் தருவனக் காட்டில்
கொல்லூ ராகிய கோட சத்தரி
நல்லூர் மலையடி வாரச் சித்தினி

கங்கை எனசௌ பர்ணிகை ஆறு
பொங்கிட ஓடும் பொலிவருட் சாறு!
தென்கரை மீதுள திருத்தலப் பேறு!
பொன்மய ஜோதிப் புகலெனு மாறு

உத்பவ லிங்க உருவடை யாளம்
அத்புதப் பிரம்ம அருவுரு வாகும்!
மத்தியிற் பொன்னிழை மருவிட லாகும்!
சத்தியும் சிவமும் சமனரு ளாகும்!

இடப்புறம் முப்பெரும் இயலருட் சக்தி
வலப்புறம் ஒப்பிய வடிவருட் பிரம்மம்
ஜோதிர் லிங்கச் சுடரருள் ஒளியாய்
ஆதி சக்தியின் அருளுரு வடிவாய்

மூலா தார முழுமைக் கலையாய்க்
காலா தேசங் கடந்தருள் நிலையாய்
சத்சித் சுகமெனும் சமநிலை யருளாய்
புத்திக் கரிதாய் புவனத் துருவாய்

பாற்கடல் லக்குமி பகவதி வாணி
சேர்த்தருள் புரியும் செழுமலர் ராணி
நாற்கரத் தாளாய் நமதருட் தாயாய்
வார்த்துரு நன்மை வடிவெடுத் தாளாய்

சத்குரு சங்கரர் சரணெனக் காட்டி
நித்திய மங்கள நிறைவெனக் கூட்டி
“போகா திரு”வெனப் புகலருள் ஈட்டி
மூகாம் பிகையின் முகமதி சூட்டிப்

பாடிடுந் துதியாற் பரசிவ நிதியாய்த்
தேடிடும் கதியாய்த் திருவருள் பவளை
நாடிடும் அடியார் நலமுற அருளைச்
சூடிடும் வடிவாம் சுடர்க்கொடி அமுதை

ஸ்ரீ மூகாம்பிகை காப்பு

மேலறி வுறவும் மெய்யுணர்ந் திடவும்
காலனு மணுகாக் கதியடைந் திடவும்
சூலிருள் களையும் சுகமினிந் திடவும்
காலடி பணிந்திக் காப்பணி வோமே!

எவ்வுட லாயினும் எடுத்துடல் இனித்து
செவ்வித மாய்வரும் சீவிதம் முடித்து
அவ்வியம் விலக்கி அகவொளி துலக்கி
கவ்விய முவ்வினைக் கருமம் அவித்து

உடல்மனம் அறிவென உபகர ணங்களும்
திடமுறத் துணைவரத் திரளமு தளித்து
இடரனு காமல் இருந்தொளிர் இன்பத்
தடமருட் காப்பு தனையணிந் தாலே

மடியும் அன்ன மயமெனும் கோசம்
முடியும் எனினும் முழுதுற ஆயுள்
வடியும் வரையில் வடிவுற வாழும்
படியும் அருளும் பரிசென தாகும்!

பின்னப் படுதுயர்ப் பிணியெவை வரினும்
அன்னப் பெருவுடல் அழகுற விளங்க
வருநோய் வருகணம் வடுவற விலக
ஒருபாய் படுகை விழுநிலை அகல

சர்க்கரை உப்பு இரத்தக் கொழுப்பு
சளிதலை வலிஎலும் பாலிடர்ப் புற்று
பக்க வாதம் படர்தோல் வியாதி
பாதம் முதற்தலை பரவிய நரம்புச்

சிக்கல் இருமல் சீக்கிடர் குதநோய்
மக்கிடு நினைவு மார்வலி குட்டம்
மூச்சிடர் கண்நோய் முகவலிப் பின்னல்
பேச்சிடர் விக்கல் பேரறி யாப்பிணி

விடத்திடர் ஏவிடும் சூனியம் எச்சம்
உடற்பிணி யால்மனம் ஊடிடும் அச்சம்
நலிவு மெலிவு நகம்பல் மயிருள்
மலியும் நுண்நோய் மலட்டுத் தன்மை

எத்தனை வகையில் எதுவந் தாலும்
அத்தனை இடரும் அடியவன் செய்த
வல்வினை அழித்து வருநொடி கழித்து
செல்லுவ தற்கருள் செய்தன வாகி

நொடியிற் கரைய நோயற ஆயுள்
முடியும் வரைக்கும் முழுநல மாயென்
அன்ன மயத்து அருவுடற் கலயம்
பொன்னென ஒளிரும் புகலருள் வாயே!

மகிழ்வுறப் பிராண மயமெனும் கோர்வை
நெகிழ்வற ஓடி நெடுவிழை சூடி
சுவாசப் பாதையிற் சுகவளி நூற்று
கோசத் தாலொளி குலவிட ஏற்றி

இடகலை பிங்கலை சுழுமுனை நாடி
எனும்பல வழிகளில் எழிலுற ஓடி
குடவுடல் ஒளிரக் குண்டலி ஙீஎழுந்
திடவருள் பொழியத் திறன்மிக வூடி

யோகமும் ஒருநிலை யாகவும் உதவும்
தேகமும் சுவாசவி வேகமும் வரவும்
பிறழறப் பிராணப் பெருவுடல் காத்துத்
திறமுற வாழத் திருவருள் பூத்து

மாறி அலைக்கும் மனோமயம் என்னும்
உறியி ளைக்கும் உடலுட் கோசம்
மடித்திட முடியா மாயப் போர்வை
அடித்தள மாகிய ஆழிச் சால்வை

ஸ்ரீ மூகாம்பிகை காப்பு

வாசனை யாகிய வல்வினை வித்து
வீசுவ தாலெழும் புல்வெளிக் கொத்து
நல்நினை வாகிடும் எண்ண விருத்தி
புல்லறி வாகவும் வந்து வருத்தி

ஆசையிற் கட்டி அலைக்கழித் திட்டு
பாசப் பிணையினிற் பட்டிழு பட்டு
கூசிடும் எண்ணக் குவியலைக் கொட்டிப்
பூசிய வன்மப் பாசறை கட்டி

சீரிய கருவி யாகிய மனது
பேரறி விழந்து பேயென அலைந்து
நல்லன மறந்து நடுநிலை துறந்து
பொல்லன வெட்டிப் பொழுதில் திளைந்து

ஆயுளின் முடிவில் ஆசையின் மூட்டைக்
காயுறச் சுமந்து கலனுடல் தேடிப்
பேயென அலையும் பெரும்பிழை வேண்டேன்!
தாயென அருளித் தயவுடன் மனதைச்

சீருடன் இயக்கிச் செய்வினை விருத்தி
வேரினை நிறுத்தி வெகுநலம் திருத்தி
நேரிய எண்ண நிறைவத னாலே
ஆரியன் எனவென் அடிமனம் நிறுத்தி

என்மனக் கோசம் எனுமருட் கருவி
தன்மய ஞானத் தத்துவம் பெருகி
சின்மய மான சிவசுக வெள்ளத்
தின்வழி யாகத் திரளருள் தரவே

தமோ எண்ணத் தடைகளை நிறுத்தி
ரஜோ எண்ணத் தளைகளைத் திருத்தி
மெத்தன அவசர மிகையினைச் சுருக்கி
சத்துவ எண்ணச் சமரசம் பெருக்கி

கசடறத் துடைத்த கண்ணா டியென
விசனம் விடுத்த விரிமன மேடை
மாசறத் துலங்க மதியினில் உண்மை
வீசிட விளங்கும் விஞ்ஞான மயக்

கோசத் துள்ளே கோதற மலரும்
வாசத் தாமரை வசப்பட லாக
வேசப் புவனம் வெளியுல கங்கள்
பேசப் படவெழும் பிறபொரு ளெல்லாம்

அறிபவன் நானெனும் அறிவிற் கெதுவோ
அறிவொளி தருமெனும் அடிப்படைப் பாடம்
புரிபட லாகப் புத்திக் கும்மொளி
தருவது யாரெனத் தன்னுட் கேள்வி

எழவைத் தென்னுள் என்பொருள் எனதென
அழவைத் தலைக்கும் அதுமம காரம்
விழவைத் துயர்த்தி விடும்வை ராக்கியப்
பழவித் தளித்துப் பயன்மர மாக்கி

ஒட்டுதல் அறிந்தும் ஒட்டா திருக்கும்
திட்டம் தெளிந்து திசையும் அறிந்து
பழுதற நாடகப் பாத்திரம் போல
ஒழுகிய வேலைகள் ஒழுங்குற முடித்து

செய்கடன் கருமச் செயலினை யோகம்
மெய்யுறச் செய்து மேநிலை எய்து
பொய்யறி வில்லாப் போதப் பெருவொளி
பெய்ய ஒளிர்ந்து பேசற மிளிர்ந்து

நான்யார் எனவும் நல்லகங் காரந்
தான்யார் எனவும் தன்னுள் வினவி
மகிழ்வாய் ஆனந்த மயமெனும் கோசம்
பகிர்வா ராகிப் பதிய வுரைந்து

ஸ்ரீ மூகாம்பிகை காப்பு

தானத் தவநெறி தன்வயத் தியானம்
மோனித் திடுமனம் முன்னிலை யோகம்
ஞானப் பெருநலம் அன்னவை கூடும்
வானச் சுகவெளி வடிவினன் ஆகி

வருநாள் நன்று வாழ்விற் பெற்ற
திருநாள் என்று தேறிக் கற்று
எதிர்பார்ப் பற்று எதுவும் முடித்து
பதிலாய் உற்ற பரிசில் இனித்து

நிறைவுற வாழும் நிலையருள் வாயே!
மறைபொரு ளாகும் முறையருள் வாயே!
முற்றும் விடுதலை யுற்றுன தருளைப்
பெற்றவ ராகும் பேறருள் வாயே!

கவிரா யனிவன் கதறிடும் ஓசை
செவியாள் வுறவும் சிறிதோ ராசை
காப்பென நூற்றுக் காலடி வைத்தேன்
யாப்பென ஏற்றுன் அருள்தரு வாயே!

படித்தோர்க் கின்பப் பரிவருள் வாயே!
பணிவோர் உள்ளம் படர்ந்திருப் பாயே!
முடித்தோர் மனதில் முனிந்திருப் பாயே
முனிவோர் நலனை முகிழ்ந்தளிப் பாயே!

காப்பிது அணிவார் காப்பென நீயே
மூப்பிறப் பிடர்வலி முறியடிப் பாயே!
நாப்பிற ழாதிந் நலம்மொழி வார்க்கு
கூப்பிடு முன்னருள் கொடுத்திடு வாயே!

மூகாம் பிகையே மூலப் பொருளே!
நாகா பரணார் நாயகி உமையே!
சாகா நிலையருள் வாயடி சரணம்
சாரதை சாம்பவி சங்கரி சரணம்!

பாரதி பைரவி பைந்தவி சரணம்!
பகவதி சரஸ்வதி பதுமலர்ச் சரணம்!
ஸ்ரீமதி துர்க்கா ஜயநிதி சரணம்!
சின்மயா நந்தச் சீரே சரணம்!

கொல்லூர் பரசிவக் கொழுந்தே சரணம்!
நல்லூழ் அளிக்கும் நலனே சரணம்!
தாயே மூகாம் பிகையே சரணம்!
தயவருட் பூரண நிலவே சரணம்!

தாயே மூகாம் பிகையே சரணம்!
தயவருட் பூரண நிலவே சரணம்!
தாயே மூகாம் பிகையே சரணம்!
தயவருட் பூரண நிலவே சரணம்!

இத்துடன் **ஸ்ரீ மூகாம்பிகை காப்பு** நிறைவு பெறுகிறது.
(மீ. ராஜகோபாலன்)

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

www.meenalaya.org

Mee. Rajagopalan

Comments to rajjag@gmail.com